உலகம் வியக்கும் உன்னதப்போரிது
உன் பங்கென்ன உண்மை சொல் தமிழா
பல்லாயிரம் இளைஞர் படைக்கலம் புகுந்தார்
தாயகம் மீட்க தன்னுயிர் தந்தார் 2

காற்றாய் கனலாய் கரைந்த மாந்தர்
விடுதலைப்போரின் வெற்றியின் விதைகள்
சுற்றம் அழந்து சொந்த மண் இழந்து
வாழ்வை அழந்து வாழ்வது எதுவரை

உலகம் வியக்கும் உன்னதப்போர்
உன் பங்கென்ன உண்மை சொல் தமிழா 2

துன்பம் கண்டும் துயரம் கேட்டும்
தோண்டு செய்யாமல் தூங்குதல் முறையா
வாடிய பயிருக்கும் நீர் வாத்த பரம்பரை
கடமை மறந்து கைகட்டி நிற்பதா

உலகம் வியக்கும் உன்னதப்போர்
உன் பங்கென்ன உண்மை சொல் தமிழா 2

பொன்னாய் பொருளாய் புலிப்படை சேர்த்தீர்
பகை பொடியாகும் படைதிறன் காண்பீர்
காரிருள் அகலும் கதிரொளி பரவும்
உரிமைப்போர் வெல்லும் உருவாகும் ஈழம்

உலகம் வியக்கும் உன்னதப்போர்
உன் பங்கென்ன உண்மை சொல் தமிழா
பல்லாயிரம் இளைஞர் படைக்கலம் புகுந்தார்
தாயகம் மீட்க தன்னுயிர் தந்தார் 2